அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :123/2017

தேதி : 27/10/2017

**உலக புகழ்பெற்ற ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில்**
**தமிழ் மொழிக்கான இருக்கை அமைவது உறுதியானது**
**உலகத் தமிழ் மக்களுக்கு பெருமை**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை**

2000 ஆண்டுகளுக்கு மேல் பழமையானதும், ஏறத்தாழ எட்டுக் கோடி மக்களால் பேசப்படுவதும், உலகின் 20 பெரிய மொழிகளுள் ஒன்றாகவும் விளங்கும் நமது தாய் மொழி தமிழுக்கு இன்று தமிழக முதலமைச்சர் ரூ.9.75 கோடி நிதி ஒதுக்கி உலக புகழ்பெற்ற ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழுக்கான இருக்கை அமைவதை உறுதி செய்திருக்கும் செய்தி மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

இவ்விருக்கை அமைவதற்கான தோற்றம் முதன் முறையாக ஹவாய்த் தீவில் வசித்துவரும் பதினெட்டுச் சங்க நூல்களையும் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்த வைதேகி ஹெர்பர்ட் என்பவருக்கு பாராட்டு எடுக்கப்பட்ட போது நிகழ்ந்தது. இப்பாராட்டு விழாவின் போது, அமெரிக்காவில் வசிக்கும் மருத்துவ நிபுணரான விஜய் ஜானகிராமனும், வைதேகி ஹெர்பர்ட்டும் பேசிக்கொண்டபோது ஹார்வார்டில் தமிழ் இருக்கை ஒன்றை அமைக்கும் எண்ணம் உருவானது.

இவர்களது தொடர் முயற்சியால் ஹார்வார்டு பல்கலைக்கழகத்தின் துறைத் தலைவரைச் சந்தித்துப் பேசி தமிழுக்கு ஒரு இருக்கையை நிறுவுவதற்கு ஹார்வார்டு பல்கலைக்கழகம் முன்வந்தது. இதற்காக 6 மில்லியன் அமெரிக்க டாலர்கள் நன்கொடையாகக் கொடுக்கப்படவேண்டும். முதலில் விஜய் ஜானகிராமனும், திருஞானசம்பந்தமும் தனித்தனியே 5,00,000 அமெரிக்க டாலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

மேலும் இப்பெரும் முயற்சிக்கு உழைத்துள்ள அனைத்து தமிழ் ஆர்வலர்களுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும், பல்துறை சார்ந்த அமைப்பினருக்கும் குறிப்பாக ”ழ” அமைப்பினருக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழமை வாய்ந்த நம் செம்மொழி அடுத்த 50 வருடங்களில் அழியக்கூடிய மொழிகள் பட்டியலில் இடம்பெற்றுள்ள நிலையில், அதனை முறியடிக்கும் விதமாக ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் புதிய இருக்கை அமைவதன் மூலம் தெற்காசியாவில் பிரிவின்கீழ் தமிழுக்கெனத் தனியான பிரிவு ஒன்றை உருவாக்கவும், அதற்கெனப் பேராசிரியர் ஒருவரை நியமிக்கவும் முடியும். இதன்மூலம், ஹார்வார்டில் தமிழ்க் கல்வியையும், தமிழ் ஆய்வையும் உயர் மட்டத்துக்கு எடுத்துச் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. இந்நிகழ்வு உலக தமிழ் சமுதாயத்திற்கு பெருமையான ஒரு தருணம்.

இது தமிழ் மொழிக்கு மட்டுமல்ல, உலகில் வாழும் அனைத்து தமிழர்களுக்கும் பெருமைக்குரியதாகும்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com